
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1186

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

59

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

## நியாயத் தராசு

# ஆணாதிக்கத்தை எதிர்த்த பெண்ணுரிமைப் போர்!

மலையாளத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் நாயர் கதை, திரைக்கதை, வசனம் எழுதி, இயக்குநர் ஹரிஹரன் அவர்கள் இயக்கிய ‘பஞ்சாக்கினி’ (1986) என்ற மலையாளத் திரைப்படத்தைத் தழுவி, தமிழில் 1989-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட படம் ‘நியாயத் தராசு’.

அதனால், வழக்கமான பாணியில் இருந்து மாறுபட்ட வடிவில், அவரது வசனங்கள் இடம்பெற்ற திரைப்படமாக ‘நியாயத் தராசு’ இருந்தது. “தனக்கு மிகவும் மன நிறைவைத் தந்த திரைக்காவியம்” என்று இந்தப் படத்தைச் சொல்லி இருக்கிறார் கலைஞர்.

இப்படத்திற்கு கலைஞர் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப, மிகச் சிறப்பாக திரைக்கதை, வசனத்தை எழுதியுள்ளதைக் காணமுடிகிறது. படத்தின் இயக்கம் கே.ராஜேஷ்வர். தயாரிப்பு மேனகா பிக்சர்ஸ். மலையாளத் தழுவல் என்பதனால், மலையாளத் திரைப்படத்தின் சாயல், காட்சிகளில் கூடுதலாகக் காணப்படுவதைப் பார்க்கமுடிகிறது.

ராதா, நிழல்கள் ரவி, நாசர், சார்லி, மு.க.முத்து ஆகியோருடன் புதுமுக நடிகர்கள் பலர் நடித்துள்ளனர். அதேபோல தமிழ்த் திரைப்படங்கள் எதிலும் நாம் இதுவரை காணாத ஒரு புதிய கதைக்களமாகவும் இத்திரைப்படம் அமைந்துள்ளது.

### படத்தின் கதை

ஆயுள் தண்டனைக் கைதியான பாரதி (ராதா) உடல்நலம் இல்லாத தனது தாயாரைக் காண அனுமதி வேண்டி, சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறார். பிறகு, அரசின் அனுமதி கிடைக்கிறது. 14 நாள் பரோலில் தனது ஊருக்கு / தனது வீட்டுக்கு வருகிறார். அந்த 14 நாட்களில் நடைபெறும் நிகழ்வுகளே திரைப்படம் ஆக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்டத் தியாகி பவானி அம்மாவுக்கு ஐந்து பிள்ளைகள். மூத்தவன் காந்தன், மத்திய ரிசர்வ் போலீஸ் பணியில் இருக்கிறான். இரண்டாவது பாரதி, புரட்சிமணி (மு.க.முத்து) என்பவரின் பேச்சாற்றலால் ஈர்க்கப்பட்டு, தீவிர கம்யூனிஸ்ட்டாக (நக்சல்பாரி) கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து இயங்குகிறாள்.

ஒரு நாள், பழங்குடிப் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து கொன்றுவிடும் பரமானந்தம் (விஜயன்) என்கிற கொடிய பண்ணையாரைக் கொலை செய்துவிடுகிறாள். அதனால், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, கைதியாக சிறையில் உள்ளார். மூன்றாவது மகள் கஸ்தூரி. விஜய் என்பவரைத் திருமணம் செய்துகொண்டு வெளியூரில் வசிக்கிறாள். அவர்களுக்குத் திலகன் எனும் ஆண் குழந்தை இருக்கிறது.

அடுத்து, நான்காவதாக போஸ் (சார்லி). தனது படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமல் குடிகாரனாகச் சீரழிந்து, தன் தாயின் மருத்துவச் செலவுக்கு என்று கண்ணில் படுவோரிடம் எல்லாம் பணம் கேட்டு பிச்சை எடுத்து, அந்தப் பணத்தில் குடிக்கிறான். அடுத்து, கடைசியாக ஒரு பெண் சரோஜினி. இன்னும் திருமணம் ஆகாமல் வீட்டில் இருக்கிறாள். வீட்டு வேலையாள் வேதநாயகம் (ரா.சங்கரன்) குடும்பத்தில் ஒருவராக வாழ்கிறார்.



படங்கள் உதவி : ஞானம்



‘கையெழுத்து இயக்கம்’ நடத்தி, பாரதியின் விடுதலைக்குப் பாடுபடுகிறான்.

இந்நிலையில், பவானி அம்மா இறந்துபோகிறார். அவர் இறப்பதற்கு முன் பவானி அம்மா தனது வீட்டை, பாரதி பெயருக்கு எழுதி வைத்துவிடுகிறார். இதை அறியும் அண்ணன் காந்தன், பாரதியைத் தாக்க வருகிறான். அவனிடமிருந்து தாளமுத்து, பாரதியைக் காப்பாற்றுகிறான். பாரதியின் முயற்சியினால், குடிகாரத் தம்பி போஸுக்கு அரசு வேலை கிடைக்கிறது. தனது அக்காவால்தான் தனக்கு வேலை கிடைத்தது என்ற உண்மை அறிந்தவுடன், தம்பி போஸுக்கு அக்கா மீதான வெறுப்பு மறைகிறது.

அதேபோல பாரதி, தனது பெயருக்கு பவானி அம்மா எழுதி வைத்த சொத்துகளைத் தன் தங்கை கஸ்தூரியின் மகன் திலகன் பெயருக்கு மாற்றி எழுதி வைக்கிறாள். இதனால் தங்கை கஸ்தூரியின் கோபம் குறைவதுடன் மனம் திருந்தி, அக்காவை மீண்டும் வீட்டுக்கு வருமாறு அழைக்கிறாள். இதற்கிடையே, தனது நெருங்கிய தோழி அமுதாவின் பிறந்தநாள் விழாவில், கலந்துகொள்ள அவளது வீட்டுக்குச் செல்லும் பாரதி, அமுதாவின் குடிகாரக் கணவன் நாகப்பனின் காமவெறி பிடித்த குணத்தை அறிந்துகொள்வதால், அங்கு தங்கிவிடாமல் திரும்பி வந்துவிடுகிறாள்.

இவர்களுடன் பாரதியின் நெருங்கிய தோழி அமுதா (குட்டி பத்மினி) அவளது கணவன் நாகப்பன் (லிவிங்ஸ்டன்) மற்றும் ‘நியாயத் தராசு’ பத்திரிகை நிருபர் தாளமுத்து, (நிழல்கள் ரவி) அவனது நண்பன் சீதாராமன் (நாசர்) ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களாக நடித்திருப்பார்கள். இவர்களுக்கிடையேதான் படத்தின் கதை நிகழ்கிறது.

சிறையில் இருந்து பரோலில் வரும் பாரதியை, அம்மா, தங்கை மற்றும் மாமா (வேலைக்காரர் வேதாசலத்தை பாரதி மாமா என்றுதான் அழைக்கிறாள்) ஆகியோர் அன்பாக வரவேற்கின்றனர். ஆனால், ஊராரும் அண்ணன் காந்தனும் தம்பி போஸும் கொலைகாரி என்று வெறுத்துப்பேசி கேவலப்படுத்துகின்றனர்.

ஊரில் இருந்து அக்காவைப் பார்க்க வரும் தங்கை கஸ்தூரியும் தனது கணவரும் பாரதியும் நட்புடன் பழகுவதைத் தவறாகப் புரிந்துகொண்டு, அக்காமீது சந்தேகப்படுகிறாள். இதனால், பாரதி வீட்டை விட்டு வெளியேறக் காரணமாகிறாள். ஆனால், ‘நியாயத் தராசு’ பத்திரிகைக்கு, பாரதியிடம் ஒரு பேட்டி எடுக்க வரும் நிருபர் தாளமுத்து, பாரதியின் நிலை அறிந்து அவளுக்கு ஆதரவாகக் கூடவே வருவதுடன், பாரதியின் தரப்பு நியாயங்களைத் தனது ‘நியாயத் தராசு’ பத்திரிகையில் எழுதவும் செய்கிறார். மேலும், பாரதியின் தண்டனையைக் குறைக்கவும் விடுதலை பெறவும் மந்திரி மற்றும் அரசு அதிகாரிகளைச் சந்தித்து கோரிக்கையும் வைக்கிறான். அதோடு நிற்காமல்,



> தாளமுத்துவின் அயராத முயற்சி வெற்றி பெறுகிறது. பாரதிக்கு தண்டனையைக் குறைத்து, அரசு விடுதலை அளிக்கிறது.

### மீண்டும் சிறைச்சாலைக்கு

தாளமுத்துவின் அன்புள்ளத்தைப் புரிந்துகொள்ளும் பாரதி, அவனது காதலை ஏற்றுக்கொள்கிறாள். இந்நிலையில், தாளமுத்துவின் அயராத முயற்சி வெற்றி பெறுகிறது. பாரதிக்கு தண்டனையைக் குறைத்து, அரசு விடுதலை அளிக்கிறது.

இம்மகிழ்ச்சியான செய்தியைத் தனது தோழி அமுதாவிடம் சொல்வதற்காக அவளது வீட்டுக்குச் செல்லும் பாரதி, அங்கு நடக்கும் கொடுமையைக் கண்டு கொதித்து எழுகிறாள். அமுதா துப்பாக்கி முனையில், துகில் உரியப்பட்டு, கூனிக்குறுகி அமர்ந்திருக்க, அவளது கணவன் நாகப்பன் துப்பாக்கியை நீட்டிப் பிடித்தவாறு மிரட்டிக்கொண்டிருக்கிறான். சுற்றிலும் குடிபோதையில் நாகப்பனின் நண்பர்கள் அமுதாவைப் பலாத்காரம் செய்யத் துடித்தபடி நிற்கின்றனர்.

இதனைக் காணும் பாரதி, நாகப்பனிடம் இருந்து துப்பாக்கியைப் பறித்து, நாகப்பனைச் சுட்டுக் கொலை செய்கிறாள். இதனைக் கண்டு அலறியபடி அவனது நண்பர்கள் தப்பி ஓடுகின்றனர். காவலர்கள் வந்து பாரதியைக் கைதுசெய்து அழைத்துச் செல்கின்றனர்.

நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டு, அங்கு வரும் பாரதியின் குடும்பமும் தாளமுத்துவும் கண்ணீர் சிந்துகின்றனர். குழந்தை திலகன், ‘பெரியம்மா எங்கே போற?’ என்று கேட்கிறான். பாரதி ‘மாங்குயில் கூவிடும் பூஞ்சோலைக்கு’ எனச் சொல்லிவிட்டு, போலீஸ் ஜீப்பில் ஏறிச்செல்வதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே ‘நியாயத் தராசு’ படத்தின் கதை. அதைத் தமிழுக்குச் செறிவூட்டியிருப்பார் கலைஞர்.

...காட்சி விரியும்

## மே தினமும் பேரறிஞர் அண்ணாவும்...

‘இந்திய வரலாற்றில், தொழிலாளர்களின் உரிமைப் போருக்கு உயர்வு தந்து, மே தினத்துக்கு விடுமுறை அறிவித்த பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கே உரித்தானது’ என முகநூலில் மே நாள் கருத்துப் பகிர்ந்துள்ளார், எழுத்தாளர் விநாயக முருகன். அவரது பதிவிலிருந்து...

“1947-இல் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, முற்போக்கு இயக்கங்களும், தொழிற்சங்கங்களும் ‘மே தினத்துக்கு விடுமுறை அறிவிக்கப்பட வேண்டும்’ என்று மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சி நடத்திய காங்கிரஸ் அரசுகளிடம் கோரிக்கைகள் வைத்தும் போராட்டங்கள் நடத்தியும் வந்தன. ஆனால், ‘மே தினத்துக்கு விடுமுறை வேண்டும்’ என்று யாரும் கோரிக்கை வைக்காத நிலையில், 1967-ஆம் ஆண்டு ஏப்ரலில், அறிஞர் அண்ணா அவர்கள் அன்றைய தமிழக அரசின் தலைமைச் செயலாளரை அழைத்து, ‘மே முதல் நாளை அரசு விடுமுறையாக அறிவிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்’ என்றார்.

அதற்கு தலைமைச் செயலாளர், ‘இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும், மே தினத்துக்கு விடுமுறை அறிவிக்கப்படவில்லை. 1957-இல் கேரளத்தில் ஆட்சிக்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சி அரசுகூட மே தின விடுமுறை அறிவிக்கவில்லை. தமிழ்நாடு அரசு அறிவித்தால், மத்திய அரசின் கோபத்துக்கு ஆளாக நேரும்’ என்று சொல்லியுள்ளார். அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள், ‘மத்திய அரசின் கோபத்தைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. நாம் திட்டமிட்டபடி மே முதல் நாளை அரசு விடுமுறையாக அறிவிப்போம்’ என்றுகூறி, 1967-ஆம் ஆண்டு மே முதல் நாளை விடுமுறை நாளாக அறிவித்ததுடன், கோவை சிதம்பரம் பூங்காவில், மே தின விழாவை அரசு விழாவாக நடத்திக்காட்டினார்.

சென்னையில், 1869-இல் பிரிட்டிஷ் ஆட்சியில் அமைக்கப்பட்ட நேப்பியர் பூங்காவில், 1923-ஆம் ஆண்டு மே முதல் தேதி, கம்யூனிஸ்ட் தலைவர் சிங்காரவேலர், மே தினத்தைக் கொண்டாடி தொழிலாளர் யூனியன் ஆரம்பித்தார். 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு, மாணவர்களின் மையமாக இந்தப் பூங்கா இருந்தது. இதற்கு ‘மே தினப் பூங்கா’ என்று பெயர் சூட்டினார் கலைஞர். இந்தியாவில் தொழிலாளர் தினத்தின் பெயரில் வேறெங்கும் இப்படி ஒரு பூங்கா இல்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ப்ளாஷ்பேக்



### தலைவரின் அன்பும் பாராட்டும்...



கலைச்செல்வி

2007-ஆம் ஆண்டில், என் தந்தையார் உரையாசிரியர் புலியூர்க் கேசிகன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையானபோது, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, குடும்பத்துடன் நன்றி தெரிவித்தோம். என் அம்மா மயிலம்மை (எ) சுந்தரத்தம்மை (மறைமலையடிகள் பெயர்த்தி - நீலாம்பிகை அம்மையார் திருவரங்கனார் மூத்த மகள்) நான், என் அக்கா நீலச்செல்வி, என் தங்கை மலர்ச்செல்வி ஆகியோரிடம் தலைவர் நலம் விசாரித்து, அன்பு பாராட்டியது மறக்க முடியாத நினைவு.

**- கவிஞர் கலைச்செல்வி,**
**நிறுவனர் - தலைவர், புலியூர்க் கேசிகன் இலக்கியப் பேரவை, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு... (நல்வருக)

### புயல், மழை சேதம்!

1955-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தமிழ்நாட்டைத் தாக்கிய பெரும்புயல் பாதிப்புகளில் இருந்து மக்கள் மீள்வதற்கு உறுதுணையாக நின்றது கழகம். என்.எஸ்.இளங்கோ, வேதாரண்யம் மற்றும் எஸ்.முத்து, கட்றாப் பாளையம் சாலை, மதுரை என இரண்டு முகவரியையும் உதவிப்பொருள்கள் திரட்டுவதற்கு அறிவித்தது. கழகத்தினர் உணவுப் பொருள்கள் - துணிகள் ஆகியவற்றைத் திரட்டி அனுப்பிவைத்து, பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900